# 08-05-2024 செய்தி

## குடும்பங்களின் சேமிப்பு கடும் வீழ்ச்சி

- இந்திய குடும்பங்களின் நிகர சேமிப்பு, 2022-23ம் நிதியாண்டில், 14.16 லட்சம் கோடி ரூபாயாக சரிந்துள்ளது என, மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- நாட்டில், குடும்பங்களின் நிகர சேமிப்பு, 2022-23ம் நிதியாண்டில், 14.16 லட்சம் கோடி ரூபாயாக சரிந்துள்ளது.
- 2020-21ம் நிதியாண்டில், அதிகபட்சமாக 23.29 லட்சம் கோடி ரூபாயாக இருந்த குடும்பங்களின் நிகர சேமிப்பு, அடுத்த மூன்று ஆண்டுகளில், கிட்டத்தட்ட 9 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு சரிவைக் கண்டுள்ளது.
- இதற்கு முன்னதாக, 2017-18ம் நிதியாண்டில், 13.05 லட்சம் கோடி ரூபாய் என்பதே குடும்பங்களின் குறைந்தபட்ச சேமிப்பாக இருந்தது.

| தியாண்டு | குடும்பங்களின் நிகர சேமிப்பு (ரூ. லட்சம் கோடியில்) |
|---|---|
| 2017-18 | 13.05 |
| 2018-19 | 14.92 |
| 2019-20 | 15.49 |
| 2020-21 | 23.29 |
| 2021-22 | 17.12 |
| 2022-23 | 14.16 |

| குடும்பங்களின் முதலீடுகள், கடன்கள் (ரூ. லட்சம் கோடியில்) | | | |
|---|---|---|---|
| பிரிவு | 2020-21 | 2021-22 | 2022-2 |
| மியூச்சுவல் பண்படு முதலீடு | 0.64 | 1.60 | 1.79 |
| பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் | 1.07 | 2.14 | 2.07 |
| முதலீடு வங்கி கடன்கள் | 6.05 | 7.69 | 11.88 |
| வங்கிசாரா நிதி நிறுவன கடன்கள் | 0.94 | 1.92 | 3.33 |

## தேர்தலில் போட்டியின்றித் தேர்வு

- பாஜக வேட்பாளர் முகேஷ் தலால், மக்களவைத் தேர்தலில் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். மக்கள் வைக்கப் போட்டியின்றி ஒருவர் தேர்வு செய்யப்படுவது கடந்த ஒரு ஆண்டுகளில் இதுவே முதல்முறை.

**போட்டியின்றித் தேர்வு:**

- தேர்தலில் ஒரு வாக்குகூடப் பதிவாகாமல் ஒரு வேட்பாளர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படுவது போட்டியின்றித் தேர்வு எனக் குறிப்பிடப்படுகிறது.
- ஏதேனும் ஒரு தொகுதியில் ஒரே ஒரு வேட்பாளர் மட்டுமே போட்டியிடும் பட்சத்தில், வேட்புமனுவைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி ஒரு மணி நேரமும் முடிந்த பின்னர், அந்த வேட்பாளர் வெற்றி பெற்றதாக மாவட்டத் தேர்தல் அதிகாரி அறிவிக்க முடியும்.
- இவ்வாறான சூழலில் அங்கு தேர்தல் நடத்துவதற்கான தேவையும் ஏற்படுவதில்லை.

**முதல் முறை அல்ல:**

- 1951-52 இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் ஐந்து பேர் போட்டியின்றித் தேர்வுசெய்யப்பட்டனர்.
- 2012 ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச மாநிலம் கன்னோஜ் தொகுதியில் நடந்த இடைத் தேர்தலில் அகிலேஷ் யாதவின் மனைவி டிம்பின் யாதவ் போட்டியின்றித் தேர்வானார்.

**பல் இல்லாத புலி:**

- ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களை விட நோட்டா அதிக வாக்குகளைப் பெற்றிருந்தால், நோட்டாவுக்கு அடுத்த இடத்தைப் பெறும் வேட்பாளரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் நோட்டாவுக்கு மொத்தமாக 1.29 கோடி வாக்குகள் கிடைத்துள்ளன.
- ஆனால், தேர்தலில் நோட்டா எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாத சூழலே நீடிக்கிறது.
- நோட்டா வாக்குக்கு எந்தவித நேரடித் தாக்கமும் இல்லாத நிலையில், அதை பல் இல்லாத புலி என்றே அரசியல் செயல்பாட்டாளர்கள் விமர்சிக்கின்றனர்.

SURESH'

## இந்தியாவுக்கான புதிய சீனத் தூதர் நியமனம்

- இந்தியாவுக்கான புதிய சீனத் தூதராக வெளியுறவுத் துறை மூத்த, அதிகாரி சூஃபெய்காங்கை அந்நாட்டு அதிபர் ஷி ஜீன் பிங் நியமித்தார்.
- லடாக் எல்லை மோதல் பிரச்சனையால் இருநாட்டு உறவில் சிக்கல் நீடித்து வந்த நிலையில் சுமார் 18 மாதங்களுக்குப் பிறகு இந்தியாவுக்கான தூதரை சீன அறிவித்துள்ளது.
- 60 வயதாகும் சூஃபெய்காங், ஆப் கானிஸ்தான், ருமேனியா ஆகிய நாடுகளில் தூதராகப் பணியாற்றியுள்ளார்.
- அவர் விரைவில் தில்லிக்குச் சென்று புதிய பொறுப்பை ஏற்பார் என்று சீனா வெளியுறவு அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- எல்லையில் கல்வான் பள்ளதாக்கு, பாங்காங் ஏரி, ஹாட் ஸ்பிரிங், கோக்ரா ஆகிய பகுதிகளில் இரு தரப்பும் படைகளை விலக்கிக் கொள்ள ஒப்புக் கொண்டன.
- இந்த உடன்பாடுகள் எட்டப்பட்ட நிலையில், இந்தியாவுக்கான புதிய தூதரை சீனா நியமித்துள்ளது.

## இந்திய சராசரி அளவை விட ஜெட்வேகத்தில் வளரும் தமிழ்நாடு பொருளாதாரம்

- தமிழ்நாடு அரசின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 8.08 சதவீதம் முதல் 10.69 சதவீதம் வரை உயரும் எனவும், இந்திய சராசரி பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமாக நிகழ்வதாகவும் என, சி. ரங்கராஜன் மற்றும் கே.ஆர். ரங்கராஜன் மற்றும் கே.ஆர். சண்முகம் ஆகியோர் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- மேலும், 2023-24 நிதியாண்டில், மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.08 சதவீதம் முதல் 9.44% வரை இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- இதே நிதியாண்டில் நாட்டின் சராசரி பொருளாதார வளர்ச்சியானது 7.3 சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- இத்துடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், நாட்டின் சராசரியை விட வேகமான பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது இந்த ஆய்வறிக்கையின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.
- 2006-2011 ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு 10.3 சதவீதம் என்ற வலுவான பொருளாதார வளர்ச்சியை எட்டியது.
- பின்னர் 10 ஆண்டு அதிமுக ஆட்சிக்காலத்தில் இது 6.21 சதவீதமாக வீழ்ந்தது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சி சரிந்த போதிலும், தமிழ்நாடு இதர பெரிய மாநிலங்களவை விடவும் வளர்ச்சி அடைந்துள்ளதைக் காண முடிகிறது என ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
- பணவீக்கம், வேலைவாய்ப்பு, கடன் கிடைப்பது, சமூக அளவீடுகள் மற்றும் பருவநிலை மாற்றம் உள்ளிட்ட மாநிலப் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை விளக்கியுள்ள இந்த ஆய்வறிக்கை, இரட்டை இலக்க வளர்ச்சியை அடைவதற்கான திறன் மாநிலத்திற்கு உள்ளது.
- வரும் ஆண்டுகளில் இந்த வளர்ச்சி வேகத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது மிகவும் அவசியமானது.
- எனவே, வேறு பல காரணங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் மூலதனச் செலவினங்களை அதிகரித்தல், நிதி சலுகைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். 12 வது நிதிக்குழு பரிந்துரைத்துரைத்தபடி, கடன் ஒருங்கிணைப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள், கடனைத் தள்ளுபடி செய்வதற்கான திட்டங்கள் குறித்து 16 வது நிதிக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது.